# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 2645 / 2010 / எம்சி. 8 நாள் : 17.3.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 19.03.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம்
## மார்ச் 2010

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010- கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லையை ஒட்டியுள்ள காளப்பட்டி பேரூராட்சி, சின்னியம்பாளையம் ஊராட்சி, மயிலம்பட்டி ஊராட்சி, நீலாம்பூர் ஊராட்சி உள்ளிட்டவை- அவினாசி சாலையில் மையபகுதியில் இரண்டு கைகள் கொண்ட மின் கம்பங்களுடன் கூடிய 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்குகளுடன் தெருவிளக்குகள் அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010- கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லையை ஒட்டியுள்ள காளப்பட்டி பேரூராட்சி, சின்னியம்பாளையம் ஊராட்சி, மயிலம்பட்டி ஊராட்சி, நீலாம்பூர் ஊராட்சி உள்ளிட்டவை- அவினாசி சாலையோர பகுதியில் சாலையோர பூங்கா மற்றும் நடைபாதை அமைக்கும் பணி - தனியார் பங்களிப்புடன் அமைக்க விருப்ப கேட்பு அறிக்கை கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 3 | நகரமைப்புப் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010- குறிச்சி, கவுண்டம்பாளையம், குனியமுத்தூர் பகுதிகளில் பயணியர் நிழற்குடைகள் அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு – 4 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு – 2 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண். 64-க்கு உட்பட்ட மேட்டுபாளையம் சாலை பேருந்து நிலையத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு- உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 – கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகளில் உள்ள சாலை மைய தடுப்பு சுவர்களை தனியார் பங்களிப்புடன் கட்டி அதில் அலங்கார பூங்கா அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்து திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு விருப்பு கேட்பு அறிக்கை கோரி பணி மேற்கொள்ளுதல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |

நன்றியுரை

அ) **திருக்குறள்**

**ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாஞ் செயல்.**

(குறள் -33)

**விளக்கம்**

**செய்யக்கூடிய செயல்கள் எவை ஆயினும், அவை எல்லா இடங்களிலும் தொய்வில்லாத அறவழியிலேயே செய்யப்பட வேண்டும்.**

திருவள்ளுவர்.

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

பொருள் : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010- கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லையை ஒட்டியுள்ள காளப்பட்டி பேரூராட்சி – சின்னியம்பாளையம் ஊராட்சி, மயிலம்பட்டி ஊராட்சி, நீலாம்பூர் ஊராட்சி பகுதியில் உள்ள அவினாசி சாலையில் மையபகுதியில் இரண்டு கைகள் கொண்ட மின் கம்பங்களுடன் கூடிய 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்குகளுடன் தெருவிளக்குகள் அமைத்தல் - மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தல் - சம்பந்தமாக.

------------------

கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் 2010-ல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளது. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறுவதை ஒட்டி நகரில் முக்கிய சாலைகள் மேம்படுத்துதல், பாதசாரிகள் நடைபாதை அமைத்தல், சாலையோர பூங்கா மற்றும் நகரை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் இப்பணிகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என கூட்ட நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி எல்லையை ஒட்டியுள்ள அவினாசி சாலையில் விமான நிலைய சாலை முதல் நீலாம்பூர் புறவழிச்சாலை வரை உள்ள இச்சாலை, காளப்பட்டி பேரூராட்சி மற்றும் சின்னியம்பாளையம், மயிலம்பட்டி, நீலாம்பூர் ஊராட்சிகளுக்கு உட்பட்டதாகும்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு பணி ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின்படியும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித நாள் 28-01-2010-ன் படியும் அவினாசி சாலையில் காளப்பட்டி பேரூராட்சி, சின்னியம்பாளையம், மயிலம்பட்டி, நீலாம்பூர் ஊராட்சி பகுதிகளில் தெரு மின்விளக்குகள் அமைத்தல், சாலையோர பூங்கா மற்றும் நடைபாதை அமைத்தல் ஆகிய பணிகளை, மாநகராட்சி மூலம் பணிகளை நிறைவேற்றித்தர அந்தந்த பேரூராட்சி ஊராட்சிகள் தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகல்களுடன் மாவட்ட ஆட்சியர் அவர்களை கேட்டுக் கொண்டதற்கிணங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மேற்கண்ட பணிகளை மாநகராட்சிமூலம் மேற்கொள்ளும்படி 28-01-2010-ம் தேதிய கடிதத்தில் மாநகராட்சி ஆணையாளர் அவர்களை கேட்டுக்கொண்டு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதன்படி மேற்கண்ட தெரு மின்விளக்கு பணிகளுக்கு கீழ்கண்டபடி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | அவினாசி சாலையில் காளப்பட்டி பேரூராட்சி பகுதியில் சுமார் 2803 மீட்டர் நீளத்திற்கு 94 எண்ணிக்கை தெருவிளக்குகள் அமைக்க | 57.00 |
| 2 | அவினாசி சாலையில் சின்னியம்பாளையம் ஊராட்சி பகுதியில் சுமார் 1244 மீட்டர் நீளத்திற்கு 42 எண்ணிக்கைகள் தெருவிளக்குகள் மற்றும் 1 உயர்மட்ட கோபுர விளக்கு அமைக்க | 30.00 |
| 3 | அவினாசி சாலையில் மயிலம்பட்டி ஊராட்சி பகுதியில் சுமார் 305 மீட்டர் நீளத்திற்கு 11 எண்ணிக்கை தெருவிளக்குகள் அமைக்க | 7.50 |
| 4 | அவினாசி சாலையில் நீலாம்பூர் ஊராட்சி பகுதியில் சுமார் 686 மீட்டர் நீளத்திற்கு லீ மெர்டியன் விடுதி வரை 23 எண்ணிக்கைகள் தெருவிளக்குகள் அமைக்க | 15.50 |
| | மொத்தம் | ரூ.110.00 இலட்சம் |

மேற்படி பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட அவினாசி சாலையில் தெருவிளக்குகள் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ 110.00 இலட்சம் ஆகும் எனவும் இதற்கான உத்தேச செலவு தொகை ரூ 110.00 இலட்சத்தை மாவட்ட நிர்வாகம் மூலம் ஒதுக்கீடு செய்து தரும்படி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மூலம் 02-03-2010 கடித வரைவு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட அவினாசி சாலையில் தெருவிளக்கு அமைக்க உத்தேச செலவினம் ரூ110.00 இலட்சத்தை மாவட்ட நிர்வாகம் நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் மேற்படி காளப்பட்டி பேரூராட்சி, சின்னியம்பாளையம் ஊராட்சி, மயிலம்பட்டி ஊராட்சி, நீலாம்பூர் ஊராட்சி பகுதியில் தெருவிளக்கு அமைக்கும் பணியை மாநகராட்சி மூலம் இப்பணியினை மேற்கொள்ளவும், பணி முடிவுற்றவுடன் அந்தந்த பேரூராட்சி, ஊராட்சிகளிடம் தெருவிளக்குகள் திரும்ப ஒப்படைக்கப்படும். மேற்கண்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண். 12359/2009/ எம்.டி. 3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.277  நாள்.19.3.2010</u>

அலுவலகக் குறிப்பு  அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010- கோவை மாநகராட்சி எல்லையை ஒட்டியுள்ள காளப்பட்டி பேரூராட்சி – சின்னியம்பாளையம் ஊராட்சி, மயிலம்பட்டி ஊராட்சி, நீலாம்பூர் ஊராட்சி பகுதியில் உள்ள அவினாசி சாலையில் சாலையோர பகுதியில் சாலையோர பூங்கா மற்றும் நடைபாதை அமைக்கும் பணிக்கு தனியார் பங்களிப்புடன் அமைக்க விருப்ப கேட்பு அறிக்கை (EOI- Expression of Interest) - மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் சமர்ப்பித்தல் - சம்பந்தமாக.

------------------

கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் 2010-ல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளது. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறுவதை ஒட்டி நகரில் முக்கிய சாலைகள் மேம்படுத்துதல், பாதசாரிகள் நடைபாதை அமைத்தல், சாலையோர பூங்கா மற்றும் நகரை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் இப்பணிகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என கூட்ட நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி எல்லையை ஒட்டியுள்ள அவினாசி சாலையில் விமான நிலைய சாலை முதல் நீலாம்பூர் புறவழிச்சாலை வரை உள்ள இச்சாலை காளப்பட்டி பேரூராட்சி மற்றும் சின்னியம்பாளையம், மயிலம்பட்டி, நீலாம்பூர் ஊராட்சிகளுக்கு உட்பட்டதாகும்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு பணி ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின்படியும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித நாள் 28-01-2010-ன் படியும் அவினாசி சாலையில் காளப்பட்டி பேரூராட்சி, சின்னியம்பாளையம், மயிலம்பட்டி, நீலாம்பூர் ஊராட்சி பகுதிகளில் தெருமின்விளக்குகள் அமைத்தல், சாலையோர பூங்கா மற்றும் நடைபாதை பணிகள், மேற்கண்ட ஊராட்சிகள் பேரூராட்சிக்காக மாநகராட்சி மூலம் பணிகளை நிறைவேற்றி தர அந்தந்த பேரூராட்சி ஊராட்சிகள் தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகல்களுடன் மாவட்ட ஆட்சியர் அவர்களை மாநகராட்சி மூலம் பணிகள் நிறைவேற்றி தரும்படி கேட்டுக் கொண்டுதற்கிணங்கவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மேற்கண்ட பணிகளை மாநகராட்சிமூலம் மேற்கொள்ளும்படி 28-01-2010-ம் தேதிய கடிதத்தில் மாநகராட்சி ஆணையாளர் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

அவினாசி சாலையில் சாலையோரப் பூங்கா மற்றும் நடைபாதைக்கு தனியார் பங்களிப்புடன் இத்திட்டத்தை மேற்கொள்ள விருப்ப கேட்பு அறிக்கை கோரவும் மாநகராட்சி மூலம் இப்பணியினை மேற்கொள்ளவும், பணி முடிவுற்றவுடன் அந்தந்த பேரூராட்சி, ஊராட்சிகளிடம் சாலையோர பூங்கா மற்றும் நடைபாதைகள் திரும்ப ஒப்படைக்கப்படும். மேற்கண்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க.எண்.12359 /2009 /எம்.டி.3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.278  நாள்.19.3.2010</u>

அலுவலகக் குறிப்பு  அனுமதிக்கலாம் என தீர்மானிக்கபட்டது.

---

## பொருள் எண் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பயணிகள் பயன் அடையும் பொருட்டு பயணியர் நிழற்குடைகள் அமைக்க தனியார் நிறுவனங்களை விருப்பு கேட்பு அறிக்கை (EOI) மூலம் தேர்வு செய்ய மாநகர மன்ற தீர்மானம் எண். 94. நாள். 30.09.2009-ன் மூலம் கீழ் குறித்தவாறு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

1.விருப்பகேட்பு அறிக்கை (EOI) ஒப்பந்தப்புள்ளி கோரி தகுதி வாய்ந்த நிறுவனங்களை தேர்வு செய்து அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் பயணியர் நிழற்குடைகள் அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

2. மேற்படி நிறுவப்படும் பயணியர் நிழற்குடைகளில் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி தனியார் மற்றும் அரசு சார்புடைய விளம்பரங்களை செய்ய அனுமதி அளிக்கவும் பயணியர் நிழற்குடைகளுக்கு, இடத்தின் அமைவிடத்தைப் பொறுத்து கட்டணம் நிர்ணயம் செய்து கொள்ள ஆணையருக்கு அதிகாரம் வழங்க அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

3. புதியதாக நிறுவப்படும் பயணியர் நிழற்குடைகளுக்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நினைவு நிழற்குடை அல்லது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நிழற்குடை என பெயர் சூட்டவும் தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கோவை மாநகராட்சியுடன் இணைந்து விருப்பு, கேட்பு அறிக்கை மூலம் குறிச்சி, கவுண்டம்பாளையம், குனியமுத்தூர் நகராட்சி பகுதிகளிலும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை ஒட்டி ஒரேவடிவிலான பயணியர் நிழற்குடைகள் அமைக்கலாம் என மாவட்ட ஆட்சியரால் வழங்கிய ஆலோசனையை தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட நகராட்சிகளில் செயல் அலுவலர்கள் அந்தந்த மன்ற தலைவர்களின் முன்அனுமதி பெற்று, ஒரு நகராட்சி பகுதிக்கு 5 இடங்கள் வீதம் மொத்தம் 15 இடங்களில் கோவை மாநகராட்சியுடன் இணைந்து பயணியர் நிழற்குடை அமைக்க மாநகராட்சியின் விருப்பு கேட்பு அறிக்கையில் சேர்த்து கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

**I.** குறிச்சி நகராட்சி

| வ.எண் | பகுதியின் பெயர் |
|---|---|
| 1 | மதுக்கரை சாலை காமராஜ் நகர் |
| 2 | போத்தனூர் சாலை |
| 3 | சுந்தராபுரம் |
| 4 | செட்டிபாளையம், ஜி.டி.டேங்க் |
| 5 | ஈச்சனாரி |

**II.** கவுண்டம்பாளையம் நகராட்சி

| | | |
|---|---|---|
| 6 | இடையர் பாளையம் தடாகம் சாலை சந்திப்பில் நிழற்குடை அமைத்தல் | 2 |
| 7 | தடாகம் ரோடு டி.வி.எஸ்.நகர் சந்திப்பு | 1 |
| 8 | தடாகம் ரோடு, கே.என்.ஜி. புதூர் சந்திப்பு | 1 |
| 9 | மேட்டுபாளையம் மெயின்ரோடு, கவுண்டம்பாளையம் சந்திப்பு | 1 |
| 10 | மேட்டுப்பாளையம் மெயின் ரோடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு சந்திப்பு | 1 |
| | மொத்தம் | 6 |

**III.** குனியமுத்தூர் நகராட்சி

| | |
|---|---|
| 11 | குனியமுத்தூர் பஸ் நிறுத்தம் அருகில் |
| 12 | இடையர் பாளையம் பிரிவு |
| 13 | வி.எல்.பி. காலேஜ் பஸ் நிறுத்தம் அருகில் |
| 14 | கோவை புதூர் பஸ் டெர்மினல் அருகில் |
| 15 | சுண்டக்காமுத்தூர் பஸ் நிறுத்தம் அருகில் |

குறிச்சி, குனியமுத்தூர், மற்றும் கவுண்டம்பாளையம் நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட உள்ள பயணியர் நிழற்குடைகளுக்கும் கோவை மாநகராட்சியால், விருப்பு கேட்பு அறிக்கை கோர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>: ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். 2524/2010/எம்.எச்.5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.279 நாள்.19.3.2010</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கபட்டது

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு 15.03.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **149/2010/** எம்.டி.2 | வார்டு எண்.17,18-ல் சின்னசாமி சாலையிலிருந்து எஸ்.என்.ஆர் கல்லூரி மற்றும் ஆவாரம்பாளையம் சாலை வழியாக அவினாசி சாலை வரை அமைய உள்ள 60’-0” திட்ட சாலையின் குறுக்கே சங்கனூர் பள்ளத்தில் புதியதாக ஆர்.சி.சி. பாலம் கட்டுதல். | 75.00 | 05.03.2010 இரண்டாம் அழைப்பு | தி/ள் என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.93 அதிகம் |
| 2 | 7365/2009/ எம்.டி.2 | வார்டு எண்.68 ரத்தினபுரி மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் சமையலறை மற்றும் உணவருந்தும் அறை கட்டுதல் | 15.00 | 04.03.2010 இரண்டாம் அழைப்பு | திரு.ஆர். செல்வராஜ் | 4.60 அதிகம் |
| 3 | 7298/2009/ எம்.டி.2 | வார்டு எண்-68-ல் உள்ள இரத்தினபுரி மாநகராட்சி மேல் நிலைப்பள்ளியில் கூடுதலாக முதல் தளத்தில் வகுப்பறைகள் கட்டுதல் | 32.00 | 05.03.2010 இரண்டாம் அழைப்பு | திரு.ஆர். செல்வராஜ் | 4.89 அதிகம் |
| 4 | 13383/2009 /எம்.டி.2 | வார்டு எண்-6 நந்தா நகர், இலட்சுமணன் நகர், எஸ்.ஆர்.டி. லேஅவுட், பண்ணாரி அம்மன் நகர் ஆகிய பகுதிகளில் சிறுபாலம் கட்டுதல் | 9.25 | 02.03.2010 இரண்டாம் அழைப்பு | திரு. பி.கனகராஜ் | 4.16 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்ற கூட்டத்தாள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:**149/2010/**எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.280 நாள்.19.3.2010</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கபட்டது**

---

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்கு 15.03.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **7603/09/** எம்.டி.4 | **வார்டு எண்- 57 பூசாரிபாளையம் மற்றும் பனை மரத்தூர் பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மராமத்து பணி செய்தல்** | 9.70 | 02.03.2010 மூன்றாம் அழைப்பு | **திரு.ஆர். மயில்வாணன்** | 4.88 அதிகம் |
| 2 | **753/2010/** எம்.டி.4 | **வார்டு எண்.62 அண்ணா நகர் சலவைத் துறையில் மேல்நிலைத் தொட்டி கட்டுதல்** | 5.10 | 02.03.2010 முதல் அழைப்பு | **தி/ள் என்.பி.கே. அசோசியேட்ஸ்** | 4.50 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்ற கூட்டத்தாள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:7603/**2009**/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண்.281 நாள்.19.3.2010**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கபட்டது**

---

## பொருள் எண் 6

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்கு 15.03.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்த தாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைப்பிற்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1237/10/ எம்.டி.3 | வார்டு எண். 64-க்கு உட்பட்ட மேட்டுபாளையம் சாலை பேருந்து நிலையத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 75.00 | 12.03.2010 முதல் அழைப்பு | **தி /ள் ஸ்ரீ புவனா கன்ஸ்ட்ரக் சன்ஸ்** | 4.88% அதிகம் | 4.50% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்ற கூட்டத்தாள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: இப்பணிகள் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:**1237/2010/எம்.டி.3**

**மாநகர மன்ற தீர்மானம் எண்.282 நாள்.19.3.2010**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கபட்டது**

---

## பொருள் எண் 7

பொருள் : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகளில் உள்ள சாலை மைய தடுப்பு சுவர்களை தனியார் பங்களிப்புடன் கட்டி அதில் அலங்கார பூங்கா அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்து திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு விருப்பு கேட்பு அறிக்கை. (**Expression of Interest**) கோரி பணி மேற்கொள்ளுதல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை:
1. உலகத் தமிழ்மொழி மாநாடு சிறப்பு அலுவலர் கூட்ட நடவடிக்கை நாள்: 14-11-2009, கடித எண்: 3/2009 நாள்: 23-11-2009.
2. ஆணையாளரின் உத்திரவு நாள்: 17-03-2010.

--------------

கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் 2010-ல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளதால் மாநகரில் உள்ள பிரதான சாலைகளை மேம்படுத்துதல், நடைபாதை அமைத்தல், சாலையோர பூங்கா அமைத்தல் மற்றும் சாலை மைய தடுப்புசுவர் கட்டி அலங்கார பூங்கா அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்படி உலகத் தமிழ்மொழி மாநாட்டிற்கான தனி அலுவலர் அவர்கள் கடந்த 14-11-2009 அன்று நடத்திய கலந்தாய்வுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில், மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகளில் உள்ள சாலை தடுப்புச் சுவர்களை தனியார் பங்களிப்புடன் புதுப்பித்து கட்டி அதில் அலங்கார பூங்கா அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்து திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு மாநகராட்சியால் விருப்ப கேட்பு அறிக்கை (**Expression of Interest**) கோரி பணி மேற்கொள்ளலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி கீழ்கண்ட சாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த சாலைகளில் சாலை மைய தடுப்பு சுவர் கட்டி அலங்கார பூங்கா அமைத்து தனியார் பங்களிப்புடன் அமைத்து அதனை மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்க ஐந்து சிப்பங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

சிப்பம்-1
1. ராஜேந்திர பிரசாத் சாலை
2. ராஜு சாலை
3. அழகப்பா சாலை

சிப்பம் -**II**
1. சின்னசாமி சாலை
2. டாக்டர் இராதா கிருஷ்ணன் சாலை

சிப்பம் -**III**
1. பாலசுந்தரம் சாலை
2. காமராஜர் சாலை

சிப்பம் - **IV**
1. மசக்காளிபாளையம் சாலை

சிப்பம் - **V**
1. திவான் பகதூர் சாலை
2. திருவேங்கடசாமி சாலை
3. கிருஷ்ணசாமி சாலை

மேற்கூறிய ஐந்து சிப்பங்களில் குறிப்பிட்டுள்ள சாலைகளில் சாலை மைய தடுப்புச்சுவர் கட்டி அலங்கார பூங்கா அமைத்து அவற்றினை மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர உரிமத்துடன் கொடுத்து அவற்றினை பராமரிக்க தனியார் நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ள விருப்பு கேட்பு அறிக்கை (**Expression of Interest**) கோரலாம்.

இந்த சாலைகளில் உள்ள சாலை மைய தடுப்பு சுவர்களில் பல இடங்களில் இடிந்தும், சில இடங்களில் இல்லாமலும் உள்ளது. ஆதலால் மாநகராட்சி சாலைகளில் ஒரே விதமான வடிவமைப்புகளுடன் கட்டப்பட வேண்டும். மேற்கண்ட பணிகளுக்கு தனியார் பங்களிப்புடன் அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல், திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு மாநகராட்சியால் விருப்பு கேட்பு அறிக்கை (**Expression of Interest**) கோரி பணி மேற்கொள்ள இப்பணியை தனியார் நிறுவனங்கள் மூலம் மாநகராட்சியில் வடிவமைத்து குறிப்பிடும் அளவீடுகளுக்கு விளம்பரங்கள் (தமிழ்நாடு அரசு உள்ளாட்சிகள் விளம்பர பலகைகள் உரிமம் சட்டம் (**Tamilnadu Urban Local Bodies Licensing of Hoardings and levy and collection of advertisement Tax rules Act 2003**) தெரிவித்துள்ளவாறு செய்து கொள்ளவும் மூன்று ஆண்டுகளுக்கு விளம்பரம் உரிமையும் தேவையெனில், உரிமம் நிட்டிப்பும் வழங்கப்படும் என்ற நிபந்தனை பேரில் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.12359/09/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.283 நாள்.19.3.2010</u>**

1. பொருளில் சிப்பம்-II ல் உள்ள டாக்டர். இராதாகிருஷ்ணன் சாலையினை ஆய்வு செய்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.
2. வார்டு 24 இராமநாதபுரம் 80' சாலை மற்றும் வார்டு 23 இராமநாதபுரம் 50' சாலை ஆகிய இரு சாலைகளுக்கும் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு விருப்பு கேட்பு அறிக்கை கோர தீர்மானிக்கப்பட்டது.
3. அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கபட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி